අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785
info@moe.gov.lk www.moe.

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/07/97/07 ඔබේ අංකය / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2025/11/26

சுற்றறிக்கை இலக்கம் *39/2025*

மேல் மற்றும் தென் மாகாணம் தவிர்த்து அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணம் தவிர்த்து அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணம் தவிர்த்து அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணம் தவிர்த்து அனைத்து கோட்டக் கல்வி பணிப்பாளர்கள்,
மேல் மற்றும் தென் மாகாணம் தவிர்த்து அனைத்து பிரிவெனாதிபதிகள்;,
மேல் மற்றும் தென் மாகாணம் தவிர்த்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள்,

**தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களின் பிக்குமாரல்லாத/ பிக்குமார்களான மாணவர்களுக்கு உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்கள் காலணிகளை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்**

2026 ஆம் ஆண்டுக்காகப் பயன்படுத்தக்கூடியவாறு 2025/06/30 ஆம் திகதிக்கு, மாணவர்களின் எண்ணிக்கை 250 இற்குக் குறைந்த பாடசாலைகளின் அனைத்து மாணவர்களுக்கும், முதலாவது நியதியான 250 இற்குக் குறைந்த அனைத்துப் பாடசாலைகளையும் தவிர, அன்றைய தினம் மாணவர்களின் எண்ணிக்கை 250 இற்கு அதிகமாகவும் 500 வரையான பெருந்தோட்டப் பாடசாலைகளில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும், விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளுக்கும், தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களில் உள்ள பிக்குமாரல்லாத மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களுக்கும் சீலமாதா கல்வி நிறுவனங்களில் உள்ள சீலமாதாக்களுக்கும் பாடசாலைக் காலணிகளை உள்நாட்டுக் காலணி உற்பத்தியாளர்கள் பாடசாலைக்கும் பிரிவெனாக்களுக்கும் வருகை தந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். இந்தக் காலணிகளை மாணவர்களுக்கு வழங்கும் செயற்பாடு இந்தச் சுற்றுநிருபத்தின்படி நடைமுறைப்படுத்தப்படுவது கட்டாயமாகும்.

02. இதற்குத் தேவையான காலணி வவுச்சர்கள் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் தங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர், மேற்குறிப்பிட்டவாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு உடனடியாகப் பகிர்ந்தளித்து, அந்த வவுச்சர்களை உரிய மாணவர்களுக்கும், பிக்கு மாணவர்களுக்கும் மற்றும் சீலமாதாக்களுக்கும் தாமதமின்றி 2025/12/07 ஆம் திகதி முதல் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

03. 2025/06/30 ஆம் திகதிக்குக் கல்வி அமைச்சின் புள்ளிவிபரக் கிளையினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கிளையினால் தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விபரங்களின் அடிப்படையில் இந்த வவுச்சர்கள் வழங்கப்படும்.


04. இதன் போது,

4.1. 2026 ஆம் ஆண்டில் காலணிகளைக் கொள்வனவு செய்வதற்காக, அனைத்துப் பயனாளிகளுக்கும், "**முன்னோடி செயற்றிட்டம்: பாடசாலைகளுக்கு வரும் உள்நாட்டுக் காலணி உற்பத்தியாளர்களிடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியும்.**" என அச்சிடப்பட்ட வவுச்சர்கள் வழங்கப்படும்.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.g moesecretaryoffice@gmail

4.2 2026 ஆம் ஆண்டில் பாடசாலைக் காலணி வவுச்சர்களுக்கான காலணிகளை வழங்குதல், அதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக உற்பத்தியாளர்களிடமிருந்து மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

4.3 இந்த வவுச்சர், அதிபரின் பொறுப்பில் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதுடன், பாடசாலைக்கு வருகை தரும் உள்நாட்டுக் காலணி உற்பத்தியாளரிடம் அன்றைய தினம் மாணவர்கள் ஊடாகக் வழங்கி காலணிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வர்த்தகப் பிரதிநிதியின் பொறுப்பில் வைத்திருக்கப்பட வேண்டிய (பகுதி 2) எனப் பிரிக்கக்கூடிய இரண்டு பகுதிகளைக் கொண்டது. வவுச்சரின் ஒரு மாதிரிப் படிவம் பின்வருமாறு.




| වෙළඳ නියෝජිත සතුව තබාගැනීම සඳහා<br>விற்பனையாளரிடம் வைத்துக் கொள்ள வேண்டியது | විදුහල්පති සතුව තබාගැනීම සඳහා<br>அதிபரிடம் வைத்துக் கொள்ள வேண்டியது |
|---|---|
| මව/ පියා/ භාරකරු විසින් පිරවිය යුතුයි.<br>தாய்/ தந்தை/ பாதுகாவலர் அவர்களால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.<br><br>මව/ පියා/ භාරකරුගේ නම : ..........<br>தாய்/ தந்தை/ பாதுகாவலர் பெயர் ..........<br><br>ජා.හැ. අංකය : ..........<br>தேசிய அடையாள அட்டை இலக்கம்<br><br>අත්සන : ..........<br>கையொப்பம்<br><br>වෙළඳ නියෝජිත විසින් පිරවිය යුතුයි.<br>விற்பனையாளரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்<br><br>විකුණුම් දිනය : ..........<br>வழங்கப்பட்ட திகதி<br><br>විදුහල්පති<br>அதிபர்<br>(නිල මුද්‍රාව යෙදීමට)<br>(அதிகாரப்பூர்வ முத்திரை) | |

05. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் பாதுகாப்பான அச்சிடும் வழிமுறைகளைப் பயன்படுத்தி அச்சிடப்படும் காலணி வவுச்சர்கள், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு அமையப் பொதியிடப்பட்டு, கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அமையப் பிரிக்கப்பட்டு, 2025/12/07 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்படும்.

06. **வலயக் கல்வி அலுவலகங்கள் / கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு வவுச்சர்களை வழங்குதல்.**

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்படும் வவுச்சர்கள் கிடைத்தவுடன் வலயக் கல்வி அலுவலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அத்துடன், வலயக் கல்வி அலுவலகங்களால் இந்த வவுச்சர்களை உடனடியாகக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பிரிவெனாக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோட்டக் கல்வி அலுவலகங்கள் தமது கோட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குரிய வவுச்சர்களை பரிசோதித்துப் பொறுப்பளிக்க வேண்டும். (தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பெயர் பட்டியல் மாகாண ரீதியாகப் பிரிக்கப்பட்டு அதன் மென் பிரதிகள் வழங்கப்படும்.)

(கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு காலணி வவுச்சர்களை வழங்கும் போது SSV 01 (EDU) படிவத்தையும், மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலகங்களுக்குப் பாடசாலைக் காலணி வவுச்சர்களை வழங்கும் போது SSV 01 (Zone) படிவத்தையும், வலயக் கல்வி அலுவலகங்களால் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பாடசாலைக் காலணி வவுச்சர்களை வழங்கும் போது SSV 01 (DIV) படிவத்தையும் மற்றும் வலய அலுவலகங்களால் பிரிவெனாக்களுக்கு வழங்கும் போது SSV 02 (Piv) இனைப் பயன்படுத்த வேண்டும்.)

07. **பாடசாலை அதிபர்களுக்கும் மற்றும் பிரிவெனாதிபதிகளுக்கும் வவுச்சர்களை வழங்குதல் / பொறுப்பேற்றல்**

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு அமையத் தனித்தனியாகப் பொதியிடப்பட்டு, பாடசாலை அதிபர்களுக்கும் மற்றும் பிரிவெனாதிபதிகளுக்கும் கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களால் (பிரிவெனாக்களுக்கு) வழங்கப்படும் காலணி வவுச்சர்களை தொடர் வரிசை இலக்கத்திற்கமைய (Serial No.) நன்கு பரிசோதித்துப் பொறுப்பளித்தல் / பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன்போது, கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்களால் (பிரிவெனாக்களுக்கு) SSV 02 (Sch) / SSV 02 (Piv) படிவங்களைப் பயன்படுத்திப் பாடசாலைக் காலணி வவுச்சர்களை பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு வழங்க வேண்டும்.

08. **மாணவர்களுக்கு வவுச்சர்களை பகிர்ந்தளிப்பதற்காக அதிபர்கள் / பிரிவெனாதிபதிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**

08.1 கோட்டக் கல்வி அலுவலகங்களால் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கிளையினால் அந்தந்தப் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்குரிய மாணவர் எண்ணிக்கைக்கு அமைய அனுப்பப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாடசாலைக் காலணி வவுச்சர்கள் பாடசாலைகள் / பிரிவெனாக்களுக்கு அமையப் பிரிக்கப்பட்டு அனுப்பப்படுவதுடன், பாடசாலை / பிரிவெனாவின் வகுப்புப் பெயர் பட்டியல்களில் பெயர்கள் உள்ள உறுதிப்படுத்தப்பட்ட உண்மையான ஆண் மாணவர்களுக்கும் பெண் மாணவர்களுக்கும் மாத்திரம் வவுச்சர்களை வழங்குவது பிரிவெனாதிபதிகள் / அதிபர்களின் பொறுப்பாகும்.

08.2 பாடசாலை / பிரிவெனாவுக்கு வழங்கப்படும் காலணி வவுச்சர்களை உப படிவ ஆவணமொன்றில் (Counterfoil Document) உள்ளடக்கிக் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதுடன், மிக விரைவாகவும் சரியாகவும் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதற்குப் பிரிவெனாதிபதிகள் / அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்போது, அந்தந்தப் பயனாளிகளின் பெயர்களை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் SSV 03 படிவத்தைச் சரியாகப் பூர்த்தி செய்து உரிய அன்பளிப்புப் பத்திரங்களைப் பயனாளிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், வழங்கப்பட்ட அந்த அன்பளிப்புப் பத்திரங்களின் மூலப் பகுதியை (Counterfoil) பாதுகாப்பாக அதிபரின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். பாடசாலைக்குக் கிடைத்த காலணி அன்பளிப்புப் பத்திரங்களில் பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் மேலதிகமாக மிகுதி இருந்தால், அதனை SSV 04 படிவத்தில் உள்ளடக்கி கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவுக்கு வழங்கக்கூடியவாறு பாதுகாப்பாகப் பொதியிட்டு கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்க வேண்டும்

08.3 மேற்குறித்த தெரிவு நிபந்தனைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஏதாவது ஒரு பாடசாலைக்குக் கிடைத்த பாடசாலைக் காலணி வவுச்சர்களின் அளவு போதுமானதற்ற சந்தர்ப்பத்தில், அதற்குரிய காரணங்களுடன் கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் / மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் பரிந்துரைகளுடன் *SSV 05* படிவத்தின் மூலம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சிலிருந்து கோரிக்கையொன்றை விடுக்க வேண்டும். மேலும், தேவையான மேலதிக வவுச்சர்களின் அளவு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும்.

08.4 பாடசாலைக்குக் கிடைக்கும் அனைத்து வவுச்சர்களின் பின் பக்கத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அதிபரின் உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்

08.5 உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட்ட வவுச்சர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களுக்கு வழங்குவதற்காக வகுப்பாசிரியரிடம் கையளிக்கப்பட வேண்டும். வகுப்பாசிரியரால் இந்த வவுச்சர்களை பதிவு செய்து அந்தந்த மாணவர்களின் பெயர்களை ஒவ்வொரு வவுச்சரிலும் குறித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன், வவுச்சர்களை மாணவர்களுக்குச் சரியாக வழங்கி அவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக SSV 03 படிவத்தைப் பயன்படுத்த வேண்டும்

08.6 தரம் 1 இலிருந்து தரம் 5 வரையான மாணவர்களின் காலணி வவுச்சர்களை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கையொன்றை அதிபர் மேற்கொள்வது உறுதிப்படுத்தப்பட வேண்டும். (பெற்றோர்களை அழைத்து நேரடியாக அவர்களின் கைகளில் வவுச்சர்களை வழங்குவது மிகவும் பொருத்தமானது.)

08.7 வவுச்சர்களின் பெறுமதி மற்றும் வவுச்சரின் இலக்கங்கள் சேதமடைந்தால் அது செல்லுபடியற்றதாகிவிடும் என்பதால் அது குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

08.8 இந்த வவுச்சர் வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த கையொப்பமிடப்பட்ட ஆவணத்தை (SSV 03) எதிர்காலச் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகப் பாடசாலை / பிரிவெனாவில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதுடன், பிரிவெனாதிபதி / அதிபரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

08.9 அதிபருக்குக் கிடைக்கும் அனைத்துக் காலணி வவுச்சர்களையும் முறையாகவும் சரியாகவும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதைத் வெளிப்படைத்தன்மையுடன் நிறைவேற்ற அதிபர் கடமைப்பட்டிருப்பதுடன், அதற்குரிய அனைத்து ஆவணங்களையும் முறையாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

08.10 வவுச்சரின் காலாவதியாகும் திகதி 2025.12.31 எனக் குறிக்கப்பட்டுள்ளதால், அன்றைய தினத்திற்கு முன்னர் காலணிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு உள்நாட்டுக் காலணி உற்பத்தியாளர்களை அதிபர் அறிவூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

09. இந்த வவுச்சர்களைக் கொண்டு காலணிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் பெற்றோர்களை அறிவூட்டுவது அதிபரின் பணியாகும். ஆயினும், காலணிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக எந்தவொரு வர்த்தக நாமத்தையோ அல்லது வியாபார நிலையத்தையோ மேம்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு அதிபர்கள் உறுதியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் காலணிகளைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவூட்ட வேண்டும் என்பதுடன், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காகப் பதிவு செய்துள்ள கடைகள் அது பற்றிக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 10. காலணி வவுச்சர்களைப் பகிர்ந்தளித்ததன் பின்னர் மேலதிகமானவற்றை ஒப்படைத்தல்

10.1 ஏதாவது ஒரு பாடசாலையில் வவுச்சர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் மேலதிகமாக இருக்குமாயின், அது தொடர்பாக அதிபரினால் கோட்ட / வலயக் கல்வி அலுவலகங்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொண்டு, அந்த மேலதிகக் காலணி வவுச்சர்களின் அளவைக் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு முறையாக SSV 04 இன்படி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 11. பொது விடயங்கள்

11.1 அதிபர்கள் பாடசாலைக்குக் கிடைத்த வவுச்சர்களை மாணவர்களுக்கு வழங்கியதன் பின்னர் மீதமுள்ள வவுச்சர்களைச் சரியாகப் பதிவு செய்து கோட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அதற்காக, வவுச்சர்களைத் திருப்பி ஒப்படைக்கும் ஆவணத்தை இரண்டு பிரதிகளுடன் தயாரிக்க வேண்டும். அத்துடன், வவுச்சரின் இலக்கம், பெறுமதி, ஒப்படைக்கப்பட்ட எண்ணிக்கை போன்ற விபரங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்காக SSV 04 படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். வவுச்சர்களை ஒப்படைத்த ஆவணத்தின் ஒரு பிரதியை பாடசாலையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதுடன், மற்றைய பிரதியை உரிய வவுச்சர்களுடன் ஒப்படைக்க வேண்டும். வவுச்சர்கள் மீதமிருந்தாலும், இல்லாவிட்டாலும், அது குறித்து SSV 04 படிவத்தின் மூலம் அறிவிக்க வேண்டும். பகிர்ந்தளிக்கப்பட்ட அனைத்து வவுச்சர்களின் மூலப் பகுதியும் (Counterfoil) பாடசாலையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்

11.2 பாடசாலைகளிலிருந்து வலயக் கல்வி அலுவலகங்களுக்குக் கிடைக்கப்பெற்ற காலணி வவுச்சர்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட அறிக்கைகள் குறித்து வலயக் கல்விப் பணிப்பாளரினால் ஆய்வு குழுவொன்றைப் பயன்படுத்திச் எதேர்ச்சையான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றேன். இது வலயப் பணிப்பாளரின் பொறுப்பாகும். அதற்காக ஆசிரியர்கள் அல்லது வேறு உத்தியோகத்தர்களைப் பயன்படுத்த வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. குறித்த அறிக்கையின் பிரதி ஒன்றை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி

அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட வேண்டும்.

11.3 தமது வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் வவுச்சர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் இறுதி அறிக்கை வலய அலுவலகங்களால் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், SSV 04 படிவத்தின் அடிப்படையில் மீதமுள்ள வவுச்சர்களுடன் ஒரே தடவையில் 2026.02.15 ஆம் திகதிக்கு முன்னர் மேலதிகச் செயலாளர் (பெறுகை), 5 ஆம் மாடி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இல்லையேல் நேரடியாக கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

11.4 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து மாணவ மாணவியருக்கும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களிலுள்ள பிக்கு மாணவர்கள், சீலமாதாக்கள் மற்றும் பிக்குமார்களல்லாத மாணவர்கள் 2026 ஆம் ஆண்டு புதிய பாடசாலைத் தவணை ஆரம்பமாகும் போதே காலணிகளை அணிந்து பாடசாலைக்கு வருகை தருவது கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினதும் மற்றும் அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாகும். எனவே, இது குறித்து விசேட கவனம் செலுத்தி 2025 ஆம் ஆண்டு இறுதிப் பாடசாலைத் தவணை நிறைவடைவதற்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு வவுச்சர்கள் மூலம் காலணிகளை வழங்குவதற்குத் தேவையான செயற்பாடுகளை நிறைவேற்றுவது உங்கள் அனைவரினதும் பொறுப்பும் கடமையும் என வலியுறுத்த விரும்புகின்றேன்.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

...............................................

...............................................

**2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்**

2026 ஆம் ஆண்டுக்காக தாங்கள் மாகாணத்திற்குரிய வலயங்களில் தெரிவு செய்த பாடசாலைகளுக்காகக் கோரியுள்ள மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கிளையினால் பரிந்துரைக்கப்பட்ட பிரிவெனாக்களுக்குரிய காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வலயம் | கோட்டம் | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர்களின் இலக்கம் | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | முதல் | வரை | ரூ. | சதம் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வவுச்சர்களை சரியாக

கையளித்தேன் பெற்றுக் கொண்டேன்

........................................ ........................................

செயலாளருக்காக
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு
பதவி முத்திரை

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

SSV 01(Zone)

வலயக் கல்விப் பணிப்பாளர்
..........................................
..........................................

**2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்**

2026 ஆம் ஆண்டுக்காக தங்களால் வலயத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்காகக் கோரப்பட்டுள்ள காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை மற்றும் பிரிவெனாக்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது

| கோட்டம் | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர்களின் இலக்கம் | | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | ரூ. சதம் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வவுச்சர்களை சரியாக

கையளித்தேன் பெற்றுக் கொண்டேன்

........................................
மாகாணக் கல்விப் பணிப்பாளருக்காக
பதவி முத்திரை

........................................
வலயக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

பிரதி : செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு

SSV 01(DIV)

கோட்டக் கல்விப் பணிப்பாளர்

..........................................

..........................................

**<u>2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்</u>**

2026 ஆம் ஆண்டுக்காக தங்களால் கோட்டத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்காகக் கோரியுள்ள காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பாடசாலை | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர்களின் இலக்கம் | | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | ரூ. சதம் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வவுச்சர்களை சரியாக

கையளித்தேன் பெற்றுக் கொண்டேன்

.......................................... ..........................................

வலயக் கல்விப் பணிப்பாளருக்காக
பதவி முத்திரை

கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்

SSV 02(Piv)

பிரிவெனாதிபதி

............................................

............................................

**2026 பாடசாலைக் காலணிகளுக்கான வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தல்**

*2026 ஆம் ஆண்டுக்காகக் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கிளையினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தங்களது பிரிவெனாவுக்குரிய காலணி வவுச்சர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது.*

| பிரிவெனா | வவுச்சர்களின் எண்ணிக்கை | வவுச்சர்களின் இலக்கம் | | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | ரூ. சதம் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வவுச்சர்களை சரியாக

கையளித்தேன்

பெற்றுக் கொண்டேன்

.........................................

வலயக் கல்விப் பணிப்பாளர்
பதவி முத்திரை

.........................................

பிரிவெனாதிபதி
பதவி முத்திரை

பிரதிகள்:

1. செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்